

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, காஞ்சிபுரம் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நேற்று (26.07.2025) நடத்திய மாவட்ட நிர்வாகம் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் நித்தியா சுகுமார் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.7.2025) சென்னை, கொளத்தூர் ஏரிக்கரையை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் சந்திரசேகர், தலைமை பொறியாளர் சத்திய பிரகாஷ், சி.எம்.டி.ஏ. தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) சரவண செல்வம், கண்காணிப்பு பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) ராதாகிருஷ்ணன், மண்டல அலுவலர் சரவணன், மாநகராட்சி அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை மாவட்ட சமூக நலன் - மகளிர் உரிமைத் துறையின் சார்பில்

# திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 521 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்கம் - நிதியுதவி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஜூலை 27-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.07.2025) சென்னை, ஜார்ஜ் டவுன், ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சென்னை மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் 521 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூபாய் 2 கோடியே 22 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவியினையும் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் மகளிருக்கு உதவிடும் வகையில் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித்திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண திருமண நிதியுதவித் திட்டம் என நான்கு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டங்களின் கீழ் பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு பயின்று தேர்ச்சிப் பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.50,000/மும், பத்தாம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.25,000/மும் வழங்கப்படுகிறது. இத்துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் உள்ள மகளிர் பயன்பெறும் வகையில் 2024-25ஆம் நிதியாண்டில் திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்க நாணயம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியான 521 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன்படி, இன்றைய தினம் (26.07.2025) பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடித்த 370 பயனாளிகளுக்கு ரூ.50,000/வீதம் ரூபாய் 1 கோடியே 85 லட்சமும், பத்தாம் வகுப்பு முடித்த 151 பயனாளிகளுக்கு ரூபாய் 37 லட்சத்து 75 ஆயிரம் என மொத்தம் 521 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடியே 22 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவித் தொகையினையும், திருமாங்கல்யம் செய்வதற்கு தலா 8 கிராம் தங்கம் வீதம் 4,168 கிராம் தங்க நாணயங்களையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.கீதா, இராயபுரம் மண்டல குழுத் தலைவர் ஸ்ரீராமலு, திரு.வி.க. நகர் மண்டல குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட சமூக நல அலுவலர்கள் செல்வி.ம.ஹரிதா, திருமதி.வெ.முத்துச்செல்வி உட்பட அரசு அலுவலர்கள், பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூரில் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் குளிர்சாதன வசதிகள் கூடிய 10 பேருந்துகள்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜூலை 27;

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், போக்குவரத்து துறை சார்பாக ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய 9 குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளையும், 1 சாதாரண பேருந்தினையும் பயன்பாட்டிற்கு துவக்க விழா நடைபெற்றது

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் நடத்துனரிடம்; பயணசீட்டுப் பெற்று பயணம் மேற்கொண்டார், மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகளை மகிழ்ச்சியுடன் வழங்கினர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதல்படி திருவள்ளூர் மாவட்டத்திற்கு அதிநவீன வசதிகளுடன்கூடிய புதிய குளிர்சாதன பேருந்துகள் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. மாதவரம் நெல்லூர் வழித்தடத்தில் 4 பேருந்துகளும், கோயம்பேடு திருப்பதி வழித்தடத்தில் 3 பேருந்துகளும், மாதவரம் திருப்பதி வழித்தடத்தில் 2 பேருந்துகளும், ஆவடி திருப்பதி வழித்தடத்தில் ஒரு பேருந்தும், 9 குளிர்சாதன பேருந்துகளும், 1 சாதாரண பேருந்தும் ஆக மொத்தம் 10 பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. திராவிட மாடல் ஆட்சியில் மாவட்டத்தில் மொத்தம் 224 பேருந்து சேவைகள்தொடங்கப்பட்டுள்ளுதுது. 72 நகர பேருந்துகளும், 152 புறநகர் பேருந்துகளும் அடங்கும். தற்போது 67 புதிய பேருந்து சேவைகளும், அதில் 15 மகளிர் விடியல் பயண பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது. மகளிர் பாடிய பயணம் மூலம் அனைத்து மகளிரும் இலவசமாக பேருந்தில் தமிழக முழுவதும் பயணம் மேற்கொண்டிருக்கின்றனர். இதனால் ஒரு மாதத்திற்கு சராசரியாக பயண செலவிற்கு ரூபாய். 838 மிச்சப்படுகிறது. ஆனால் அரசுக்கு நாள் ஒன்றுக்கு 57 லட்சம் ரூபாய் வருவாய் செலவினம் கூடுகிறது. இதனால் மாதத்திற்கு சுமார் 7000 கோடி ரூபாய் வரை செலவினம் கூடுகிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், திருவள்ளூர் மண்டல போக்குவரத்துகழக பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன், நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ,எஸ். மகாலிங்கம், அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், சன் பிரகாஷ், ஜி.ஆர். திருமலை, ப.ச. கமலேஷ், நாராயணபிரசாத், சிட்டிபாபு, பொன் பாண்டியன், ஜெயபாரதி, பொன் விமல், மோதிலால், தியாகராஜன், கு.பிரபாகரன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### பராமரிப்புப் பணி காரணமாக

# தாம்பரத்தின் சில பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஜூலை 27-

செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை வரை புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2வது வரிசை பிரதான குடிநீர் குழாயினை, ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் குடிநீர் பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 30.07.2025 அன்று காலை 08.00 மணி முதல் 01.08.2025 இரவு 10.00 மணி வரை மண்டலங்கள் 7, 8, 9, 10, 11, 12, 13 மற்றும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது என்று சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை வரை புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2000 மி.மீ விட்டமுடைய 2வது வரிசை பிரதான குடிநீர் குழாயினை, ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் 2000 மி.மீ குடிநீர் பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 30.07.2025 A ~ 08.00 5 5 01.08.2025 8 10.00 வரை மண்டலங்கள் 7 (அம்பத்தூர்), 8 (அண்ணா நகர்), 9 (தேனாம்பேட்டை), 10 (கோடம்பாக்கம்), 11 (வளசரவாக்கம்), 12 (ஆலந்தூர்), 13 (அடையாறு) மற்றும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.



சென்னை, ஜார்ஜ் டவுன், ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சென்னை மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் 521 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூபாய் 2 கோடியே 22 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவியினையும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று வழங்கினார். உடன் மேயர் ஆர்.பிரியா, எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.கீதா, மண்டலகுழுத் தலைவர்கள்ஸ்ரீராமலு , சரிதா மகேஷ்குமார், மாவட்ட சமூக நல அலுவலர்கள் செல்வி.ம.ஹரிதா, வெ.முத்துச்செல்வி ஆகியோர் உள்ளனர்.

### தனது அடையாளத்தை காட்டிக் கொள்வதற்காக சுற்றுப் பயணத்தை தொடங்கி இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி!

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை அற்புதமான திட்டமாக தமிழ்நாடு வரவேற்கிறது!

### நெடுஞ்சாலைத் துறை சார்பில் பணிகள் ஆய்வின் போது அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

சென்னை, ஜூலை 27-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.7.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையத்தினையும் (Kolathur Dialysis Centre), சென்னை, பேப்பர் மில்ஸ் சாலை, ராஜா தோட்டத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.27.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 161 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சந்தையும் (Kolathur Modern Market), சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் 'மக்கள் சேவை மையத்தையும் (Citizen Service Centre)' மற்றும் கொளத்தூர் ரெட்டேரி அருகிலுள்ள ஏரிக்கரையை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மற்றும் கொளத்தூர் ரெட்டேரி சாலை சந்திப்பில் உள்ள 7 மீட்டர் அகலமும், 600 மீட்டர் நீளமும் கொண்ட சேவை சாலைகளை சீரமைப்பது குறித்தும் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரெட்டேரி உயர் மட்ட பாலத்தின்கீழே அழகு படுத்துதல் பணி கள் குறித்தும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர் பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பொதுப்பணித்துறை அமைச்சர்.வ.வேலு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

கொளத்தூர், ரெட்டேரி சாலையில் உள்ள உயர் மட்ட மேம்பாலத்தின்கீழ் (Beautific ation of flyover) அழகு படுத்தவும் மற்றும் சேவை சாலைகளை (Service Road) புதுப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்த வகையில் 7 மீட்டர் அகலமும், 600 மீட்டர் நீளமும் கொண்ட நடைப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் சி.எம்.டி.ஏ. சார்பில் கொளத்தூர் ஏரியை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒப்பந்ததாரர் 2025 ஆகஸ்ட் மாதத்திற்குள் பணிகள் முடிவடையும் என தெரிவித்தார். அக்டோபர் மழைக்கு முன்பாக பணிகள் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளோம்.

கொளத்தூர், ரெட்டேரி சாலையில் உள்ள உயர்மட்ட மேம்பாலத்தின் கீழ் வருவதால் நெடுஞ்சாலைத்துறை சார்பாக ஒரு சில பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இன்று ஆய்வு செய்தோம். நெடுஞ்சாலை துறையைச் சேர்ந்த கோட்ட பணியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் பணியை மேற்கொள்ள உள்ளனர். கொளத்தூர், செந்தில் நகரில் நகரும் படிக்கட்டு அமைக்கப்படும் என கூறினேன். அது தொடர்பான வழக்கு நடைபெற்றது. அரசு சார்பாக வழக்கு வெற்றி பெற்றுள்ளது. ரூபாய் 15.42 கோடி செலவில் அதற்கான பணிகள் தொடங்கி விட்டது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதன் பணிகள் முடிவடையும். ரூபாய் 139 கோடி செலவில் பாடி ரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்று வருகிறது. 70 சதவீதம் பணிகள் நடைபெற்றுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

கொளத்தூரில் பிறக்க முடியவில்லை என திரு வண்ணாமலை வாக்காளர்கள் வருத்தப்படுகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஆயிரம் பணிகள் இருந்தாலும் மாதம் மாதம் தனது தொகுதிக்கு வருகிறார். அதை பார்த்து நாங்களும் எத்தனை பணிகள் இருந்தாலும் தொகுதிக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் வருகிறது.

திமுகவை எடப்பாடி பழனிசாமி உருட்டுக்கள் பலவிதம் என விமர்சனம் செய்தது குறித்தான கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் பதில் :

அவர் ஆட்சியில் நடைபெறுவதை மீண்டும் நினைவுபடுத்துகிறார். யார் ஆளுங்கட்சியாக இருந்தாலும் மக்கள் கோரிக்கை நிறைவேற்றுவது தான் பார்க்க வேண்டும் அந்த ஆட்சியை விட இந்த ஆட்சி மக்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் மும்முர மாக உள்ளது.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை அற்புதமான திட்டம் என தமிழ்நாடு வரவேற்கிறது. தங்கள் அடையாளத்தை காட்டிக் கொள்வதற்காக மக்கள் மறந்துவிடக்கூடாது வெளியே வந்து ரொம்ப நாள் ஆகிவிட்டதால் சுற்றுப்பயணத்தை தொடங்கி இருக்கிறார். தேர்தல் நேரத்தில் மக்கள் எடைபோட்டு பார்ப்பார்கள். எங்கள் அணி 200க்கு 200 வெற்றி பெறும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர். நாங்கள் அவரை மதிக்கிறோம் தனது அடையாளத்தை காட்டி கொள்வதற்காக அங்கொன்றும் இங்கொன்றும் வந்தது எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார் பேசுவதில் உண்மை இல்லை.

பிரதமர் மோடி தமிழகம் வந்துள்ளது குறித்தான கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில் :

நாடாளுமன்றத் தேர்தலுக்கு மாண்புமிகு ஒன்றிய பிரதமர் அவர்கள் வந்தார். சட்டமன்றத் தேர்தல் வரப் போகிறது அதற்காக வருவார். இந்த மண் திராவிட மண், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் என மும்மூர்த்திகளால் பண்பட்டு இருக்கின்ற இந்த மண் எந்த காலத்திலும் பிரதமர் வந்தாலும், அவரின் சகாக்கள் வந்தாலும் இந்த மண்ணிலே காவிகள் எந்தகாலத்திலும் காலூன முடியாது.

சைதாப்பேட்டை மேம்பாலம் எப்போது முடிவுக்கு வரும் என்ற கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலுவின் பதில் :

நேற்று முன்தினம் கூட சைதாப்பேட்டை மேம்பால பணிகளை மூன்று கிலோ மீட்டர் நானே நடந்து சென்று ஆய்வு மேற்கொண்டோம். பொங்கல் தினத்தில் சைதாப்பேட்டை மேம்பாலத்தை முதலமைச்சர் அவர்கள் திறக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மத்திய கைலாஷ் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது என்ற கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் பதில் :

மத்திய கைலாஷ் பகுதிகளில் நானே பலமுறை பயணித்திருக்கிறேன். அந்த பகுதிகளில் வீட்டிற்கு ஒரு கார் என்று இல்லாமல், வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் கார் உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள சாலைகளை விரிவுபடுத்தி சர்வீஸ் சாலையை அகலப்படுத்தி, மேம்பால பணிகள் முடிந்த பிறகு அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருக்காது. இவ்வாறு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில் நுட்ப அலுவலர் சந்திரசேகர், தலைமை பொறியாளர் சத்திய பிரகாஷ், சி.எம்.டி.ஏ. தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) சரவண செல்வம், கண்காணிப்பு பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) ராதா கிருஷ்ணன், மண்டல அலுவலர் சரவணன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, சதீஷ், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐ.சி.எப். முரளிதரன், மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி. தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி, மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.




தர்மபுரி கிழக்கு மாவட்டம், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில்,தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்,நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில் நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாற்றுக் கட்சியை சார்ந்த பெண்கள்,இளைஞர்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் கழகதலைவரின் திராவிட மாடல் ஆட்சியால் ஈர்க்கப்பட்டு தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் தர்மபுரி நகர கழக செயலாளர் நாட்டான் மாது, ஒன்றிய கழக செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம்,டி.எல்.காவேரி, நகர துணை செயலாளர் முல்லைவேந்தன்,ஐ.டி.விங் எம்.பி.கௌதம்,உதயசூரியன்,மற்றும் சூர்யா,அன்பரசு, வெங்கட்ராமன்,துரை,கவியரசு,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.